[2015 செப்டம்பர் 29

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—தொடர்ச்சி

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பாசனத்திற்குத் தண்ணீர் வழங்க முடியாது என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், கொஞ்சம் இருங்கள், சத்துணவு ஊழியர்கள் பிரச்சினையை நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அடுத்தது, உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புழல் சிறையில், கடந்த 25 ஆம் தேதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜவாஹிருல்லா, நீங்கள் உட்காருங்கள். அடுத்தது நீங்கள் பேசலாம், கொஞ்சம் இருங்கள். இப்பொழுது உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம், நீங்கள் உட்காருங்கள், நான் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் சத்துணவு குறித்து பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். உங்கள் பெயரை நான் அதில் சேர்த்துக்கொள்கிறேன். இப்போது உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(இ) சத்துணவு ஊழியர்கள் பிரச்சினை—தொடர்ச்சி

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை சந்திக்கவேண்டும் என்று பல மாவட்டங்களிலிருந்து. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசும்போது, நான் அதனை எடுத்துக்கொள்கிறேன். இப்போது எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் என்று அறிவிக்கப்படவில்லை. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் தேவையில்லாததைப் பேசினால், நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்காமல் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்கிற தலைப்பிட்டு, அவர்கள் பேரணி நடத்தி வந்திருக்கிறார்கள். வந்தவர்களை முறையாக காவல் துறையினர் அவர்களை அழைத்துக் கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசங்கர், நீங்கள் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் சொல்லிவிட்டார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) பதிவு செய்துவிட்டேன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவர்களை முறையாக காவல் துறையினர் அழைத்துக்கொண்டு, சமூக நலத் துறையின் செயலரைப் பார்த்துப் பேசியிருக்கிறார்கள். பேசியதற்குப் பிறகு, இரவு நேரம் ஆகி விட்ட காரணத்தினால், அமைச்சர் அவர்களை சந்திக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, காவல் துறையினரின் அனுமதியோடு, அவர்களின் துணையோடு, நேற்று இரவு 10¾ மணியளவில் என்னுடைய இல்லத்திற்கு வந்து, கிட்டத்தட்ட 15 நிருவாகிகள், சத்துணவு ஊழியர்கள் அனைவரும் வந்து சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் பேசியபோது, இதுபோன்று ** எந்தப் பிரச்சினையும் எழவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை சந்திக்கவேண்டும் என்கிற ஒரே ஒரு குறிக்கோளை மட்டும், கோரிக்கையை மட்டும் வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அது நிறைவேற்றப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்ததற்குப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி பா. வளர்மதி] [2015 செப்டம்பர் 29

பிறகு, மிகவும் மகிழ்ச்சியாக (மேசையைத் தட்டும் ஒலி), இரண்டொரு கோரிக்கைகளை மட்டும் என்னிடத்திலே தெரிவித்தவுடனேயே, நான் அவர்களுக்கு திருப்பிச் சொன்னேன், எதுவாக இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுசென்று, உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும் என்று சொன்னதற்குப் பிறகு, மீண்டும் இரவு 12–00 மணியளவில் என்னை சந்தித்து, நன்றாக, மகிழ்ச்சியாக பேசிவிட்டு, இன்று மாலை 5–00 மணியளவில் என்னை மீண்டும் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு, சந்தோஷமாகச் சென்றிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையே தவிர, ** இதை எதிர்க்கட்சியைச் சேர்ந்திருக்கிற மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் சொல்வதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது, விசித்திரமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சத்துணவு ஊழியர்கள், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் போராட்டம் நடத்தியபோது, அன்றைய சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அன்றைக்கிருந்த தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சொல்லியிருக்கிறார், "சத்துணவு ஊழியர்கள் போராட்டமா? அந்தப் போராட்டத்தை இரும்புக் கரம் கொண்டு அரசாங்கம் அடக்கும்" என்று சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இது தி.மு.க. தலைவர், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் சொன்ன வார்த்தையாகும். எங்களிடத்தில் ஆதாரம் இருக்கின்றது. (குறுக்கீடு) ஆதாரத்தை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் காட்ட விரும்புகிறேன். ** மகிழ்ச்சியோடு சத்துணவு ஊழியர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் சொன்னாரா, இல்லையா என்பது மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

பிற்பகல் 12–25

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: ** என்பதை அவைக் குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டுமென்று (குறுக்கீடுகள்) கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன விஷயம்? சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியிலே குறுவை சாகுபடி இல்லாமல் சம்பா மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு டெல்லியிலே நடைபெற்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், அதுகுறித்து கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லி, உட்காருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அந்தக் குழுவில் கர்நாடகம் தண்ணீர் தர முடியாது என்று மறுத்துவிட்டது. இதனால் சம்பா சாகுபடி நடைபெறாதோ என்கிற மிகுந்த அச்சம் கலந்த சூழ்நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதெல்லாம் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன் அவர்கள்.

திரு. க. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதி கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் காவேரி நதிநீர்ப் பிரச்சினை மேற்பார்வைக் குழுவினுடைய கூட்டம் டெல்லியிலே நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. குணசேகரன், கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.